Y.M.CA

## மந்திகையில் மீண்டும் பிரெஞ்சு வைத்தியக்குழு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றவென பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் இவ்வாரம் வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மே மாதம் வவுனியாவில் தாண்டிக்குளம் பகுதியில் வைத்து வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஹெலிகப்டரில் இருந்து தாக்குதல் நடாத்தியதையடுத்து மந்திகையில் இருந்த இவ்வைத்தியக்குழுவினர் தமது சேவைகளை நிறுத்திக்கொண்டு கொழும்பில் உள்ள தலைமையகத்துக்கு சென்றிருந்தனர். யாழ் மாவட்டத்தில் மந்திகை ஆஸ்பத்திரியில் மட்டுமே பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் சேவையாற்றி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இவர்கள் இங்கு சேவைகளை ஆரம்பித்தனர். இந்திய இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்த வடமராட்சிப் பகுதி மக்களுக்கு பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் சிறந்த சேவையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (50)

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 221 பிரசோற்பத்தி ஆனி 23 (07 - 07 - 1991) ஞாயிறு

# ஈழத்தமிழரை நாடு கடத்துவது அனைத்துலகப் பிரச்சினை

## தமிழக முதல்வர் ஜெயலலிதா சொல்கிறார்

**தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை நாடுகடத்துவது மாநிலப் பிரச்சினை மட்டுமல்ல, அது உலக அளவில் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு தேசிய பிரச்சினையும் கூட என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.**

அகதிகள் முகாமுக்கு வெளியே ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இவர்களில் பதினோராயிரம் பேர் வரையே தமது விவரங்களைப் பொலிஸில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் இம் மாதம் 12 ஆம் திகதி வரை பதிவு செய்யும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்தரவை மீறி பதிவு செய்யாதிருப்போரை நாடு கடத்துவதா இல்லையா என்பது குறித்து இந்திய மத்திய அரசும், இலங்கை அரசும் பேசி முடிவு செய்ய வேண்டும் எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

## வரதன் மரணத்தையடுத்து
## மலையக மக்கள் முன்னணி பொலிஸாரால் விசாரணை

கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீதான குண்டு வெடிப்பு தொடர்பாக தல வாக்கலையில் பொலிஸார் கைது செய்யச் சென்றபோது

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சுவிற்சலாந்தில் எழுச்சி ஊர்வலங்கள்

சுவிற்சலாந்தில் உள்ள ஈழத்தமிழர்கள் எழுச்சி ஊர்வலங்களை அண்மையில் நடாத்தினார்கள். பிரதான நகரங்களான சூரிச், ஜெனிவா ஆகிய இடங்களில் இடம் பெற்ற இப்பேரணிகளில் ஐரோப்பியர்களும் கலந்து கொண்டனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா அகதி முகாம் மாற்றப்படவுள்ளது

தற்போது வவுனியாவில் இயங்கும் அகதி முகாம் விரைவில் மாநகரசபைக் கட்டிடத்தில் இருந்து எல்லப்பர் மருதங்குளத்திற்கு இடமாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வவுனியா ரயில் நிலையத்திற்குச் செல்லும் பிரயாணிகள் தங்கியிருப்பதற்கு வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## மேலதிக இராணுவம் தமிழகத்துக்கு வரும்

தமிழ் நாட்டின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு மேலதிகமாக இராணுவத்தை அனுப்புமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கேட்டுள்ளார்.

இதற்கு மத்திய அரசு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்

## ராஜீவ் காந்திக்கு பாரத ரத்னா விருது

இந்தியாவின் அதி உயர்ந்த விருதான 'பாரதரத்னா' முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நேற்று வழங்கப்பட்டது.

ராஜீவின் மனைவி சோனியா காந்தி ஜனாதிபதி வெங்கடராமனிடமிருந்து இந்தவிருதினைப் பெற்றுக்கொண்டார்

## புதிய பிரிட்டிஷ் தூதுவர் விரைவில் நியமனமாவர்

இலங்கைக்கான புதிய பிரிட்டிஷ் தூதுவராக ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக பிரிட்டிஷ் அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜெனரல் சேபால அட்டிகல மூலமாக இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதுவர் டேவிற் கிளாட்ஸன் வெளியேற்றப்பட்டதற்கு பிரிட்டன் லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது,

## நிவாரணப் பணிக்கு வாராந்தம் 30 கோடி ரூபா

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் வாராந்தம் முப்பது கோடி ரூபாவை செலவிடுவதாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் சிறிசிரி சில்வா தெரிவித்தார்

வடக்குக் கிழக்கில் உள்ள அகதிகளின் எண்ணிக்கை சுமார் பதினேழு லட்சம் பேர் எனவும் குறிப்பிட்டார்.

## வவுனியா ஆஸ்பத்திரியில் ஒக்சிஜன் தட்டுப்பாடு

வவுனியா அரசினர் ஆஸ்பத்திரியில் ஒக்சிஜன் இல்லாததால் பல தமிழ் நோயாளிகள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தினமும் முன்னூறு நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் இந்த ஆஸ்பத்திரிக்கு 400 பஞ்சு ரோல்களும் 5000 பன்டேஜ் ரோல்களும் தேவைப்படுகின்றன.

ஆனால் 175 பஞ்சு ரோல்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வரதன் என்ற பெயரில் உள்ளோர் கைது

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக வரதன் என்பவர் மீது கொண்ட சந்தேகத்தையடுத்து கொழும்பு நகரில் வசிக்கும் வரதன் என்ற பெயர்களையுடைய பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இவர்களில் சிலர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 50

## உயர் நீதிமன்றில் மனு
## சுங்கப் பகுதி பதவி உயர்வு நிறுத்திவைக்க உத்தரவு

சுங்கப்பகுதியில் அத்தியட்சகர்களாகப் பதவியுயர்வுக்கு அதிகாரிகளைத் தெரிவு செய்வதை நடைமுறைப்படுத்தாதிருக்க உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

சுங்க உதவி அத்தியட்சகரான எஸ். குஞ்சிதபாதன் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கின் சுங்கப் பணிப்பாளர் நாயகம், சட்டமா அதிபர், நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர். (48)

## பதிவு செய்யும் திகதி நீடிக்கப்படமாட்டாது

மேல் மாகாணத்தில் தங்கியிருக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் விவரங்களைத் தெரிவிக்கும் இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாது எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இம் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து பதின்நான்கு நாள்களுக்குள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு இவர்கள் தமது விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## லண்டன் அலுவலகம் தொடர்ந்து இயங்கும்

விடுதலைப்புலிகளின் லண்டன் அலுவலகம் தொடர்ந்தும் செயற்படும் என்று பொதுநலவாய நாடுகளின் இணைச் செயலாளர் மார்க் லெநொக்ஸ் தெரிவித்துள்ளார்

பிரிட்டிஷ் மக்கள் சபையில் கேள்வியொன்றுக்கு பதில் அளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். (33)

# நல்லபாம்புக் கடிக்கு
## வாழைச்சாறு நல்ல நிவாரணி

நல்லபாம்பு கடித்தால் உடனே வாழைமரம் இருக்கும் இடத்திற்கு அரிவாளுடன் ஓடுங்கள். அடியில் ஒரு வெட்டு, நுனியில் ஒரு வெட்டுப் போட்டுத் துண்டத்தை எடுத்து வாருங்கள். பட்டையாக உரித்து மண் சட்டியில் அல்லது பீங்கான் கோப்பையில் சாறு பிழியுங்கள் கால் படி சாற்றைக் கடிபட்டவருக்குக் கொடுங்கள். நல்ல பாம்பின் நஞ்சு ஒன்றும் பண்ணாது. ஆள் நிச்சயம் பிழைத்துக் கொள்வார்.

உங்களுக்குச் செய்தி வர நேரம் ஆகி விட்டாலும், வாழைமரம் கொண்டு வர நேரம் ஆகி விட்டாலும் கடிபட்டவர் பல் கிட்டி விடும். வாழைப் பட்டைச் சாற்றை அவர் குடிக்க முடியாது.

பாம்புக் கடிபட்டவரின் பற்கள் கிட்டியிருந்தால் சில வாழைப் பட்டைகளை முதலில் உரித்துக் கீழே பாயாக விரித்து அதன்மேல் அவரைப் படுக்க வையுங்கள் பிறகு சாறு பிழியுங்கள். சாறு பிழியவும், அவர் வாய் திறக்கவும் நேரம் சரியாக இருக்கும். பிறகு சாற்றைக் குடிப்பார் எழுந்து நடப்பார்.

இந்தச் சஞ்சீவிச் சாறு நல்லபாம்புக் கடிக்குப் 10க்கு 10-ம், பிற பாம்புக் கடிக்கு 10க்கு 7-ம் உயிர் கொடுத்துக் குணப்படுத்தி வருகிறது. இந்தச்செய்தியை உங்கள் ஊரிலுள்ள அனைவருக்கும் சொல்லி வையுங்கள்:

# மனித உரிமை மீறலை வெளிப்படுத்துவோருக்கு
# வெளிநாட்டு நிதி உதவி!

இலங்கையில் தென் பகுதியில் அரசபடையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற் போனோர் பற்றிய விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டுவர மூவலும் அமைப்புக்களுக்குப் உதவி வழங்கப் பல வெளிநாட்டு அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

காணாமற் போனோர் பற்றி அவர்களின் குடும்பத்தினர் அரசிடம் உதவி கோரவும், மனித உரிமை மீறல் சம்பவங்களை அம்பலப்படுத்தவும் தெற்கில் தற்பொழுது உதவி வரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு இதற்கமைய ஐந்து மில்லியன் வெளிநாட்டு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கனடா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளும், நோராட் மற்றும் மனிதஉரிமை அமைப்புக்களும் இந்த நிதி உதவியை வழங்கியுள்ளன.

### உங்களுடையதா?

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மு இளையவன் குடும்பத்திற்கான நிவாரண உணவு முத்திரை கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆசிரியபீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சி உறுப்பினர்கள்
# இருபதவி வகிக்க முடியாது

உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ள கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணிப்பாளர்கள் தங்கள் முன்னைய பதவிகளை ராஜினாமாச் செய்ய வேண்டுமென அரசு பணித்துள்ளது.

இதற்கான சட்டமூலமொன்று மூன்று வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தற்பொழுது புதிதாக உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவாகியுள்ளோரில் கணிசமானோர் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கடலட்டை தேடுவோருக்கும் அடையாள அட்டை

தமிழ் நாட்டில் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் அனைவரும் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும், கடற்றொழிலாளர்களுக்கான விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் படகுகளும் பதிவு செய்யப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலட்டை சேகரிப்போரும் இதற்கு விதிவிலக்கல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து இளைஞர் 9 ஆவது இதழ்

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் 'இந்து இளைஞன்'' 9 ஆவது இதழ் வெளிவந்துள்ளது.

இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர சமயப் பெரியார்கள், அன்பர்கள் முன்வந்து ஆக்கமும், ஊக்கமும் தந்து இந்து சமயப் பணியை மேலும் வளர்க்க ஒத்தாசை புரியுமாறு பேரவைப் பொதுச் செயலாளர் சி.சி. வரதராசா கேட்டுள்ளார்.

இப்பத்திரிகை தொடர்பான மேலதிக விவரங்கட்கு ''பொதுச் செயலாளர்'' யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-11)

# தனித்தராசுகளைப் பயன்படுத்தி
## குறைந்த நிறைகளை நிறுக்கப் பணிப்பு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் ஒவ்வொரு கிளைகளிலும், ஒரு கிலோவுக்குக் குறைவான பொருள்களை நிறுவை செய்வதற்கெனப் புறம்பான நிறுவைத் தராசுகளை வைத்திருக்க வேண்டும் என யாழ் செயலக விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு யாழ் ப.நோ.கூ. சங்கங்களுக்கு பணித்துள்ளது.

பெரும்பாலான ப.நோ.கூ சங்கங்களில் கூடுதலான நிறைகளை நிறுவை செய்கின்ற தராசுகளிலேயே குறைந்த நிறையுடைய பொருள்கள் நிறுக்கப்படுகின்றன. இதனால் பாவனையாளர்களுக்கு சரியான நிறைகளின் படி பொருள்கள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இதன் காரணமாகவே ஒவ்வொரு கிளைகளிலும் கூடுதலான பொருள்களை நிறுப்பதற்கெனவும், ஒரு கிலோவிற்குக் குறைவான பொருள்களை நிறுப்பதற்கெனவும் வெவ்வேறு தராசுகளை வைத்திருக்கப் பணிக்கும்படி முகாமையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

யாழ் குடாநாட்டிலுள்ள 24 ப.நோ.கூ சங்கங்களுக்கும் இப்பணிப்பு வழங்கப்பட்டுள்ளது. (47)

# 'சாளரம்' பூலை இதழில்
# தலைவரின் வாழ்த்து செய்தி

'சாளரம்' பூலை இதழ் வெளி வந்துள்ளது.

தலைவர் பிரபாகரனின் முத்தமிழ் விழா வாழ்த்துச் செய்தியின் தொகுப்பைக் கொண்டுள்ள இவ்விதழில் மாணவர்களுக்கும் பெரியோருக்கும் பயன்படும் பல கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

காட்டுவளம், பயிர்ச்செடிகள் வளர மின்சாரம் போன்ற குறிப்புகளையும் பனிப்போர், சேகுவேராவின் வரலாறு, பதநீர் போன்ற கட்டுரைகளையும் நுண்ணறிவுப் போட்டி மற்றும்பல அம்சங்களையும் இவ்விதழ் தாங்கி வந்துள்ளது

சிரித்திரனின் நகைச்சுவை கார்ட்டூன்கள் சாளரத்தின் பின்புற அட்டையை அழகு படுத்தியுள்ளன.

# உணவுப் பொருள்களில் ஈக்கள்; மருந்துப் பரிசோதகர் எச்சரிக்கை

கேரதீவு - சங்குப்பிட்டித் துறைமுகப் பகுதியிலும் பூநகரி பஜார் பகுதியிலுமுள்ள தேநீர் மற்றும் உணவுச் சாலைகளில் சுகாதார வசதிகளுக்கு இணங்க ஈக்கள் மொய்க்காதவாறு உணவுப் பண்டங்கள் பாதுகாத்து வைக்கப்பட வேண்டும் என்று கடந்த வாரம் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்ட யாழ் உணவு, மருந்துப் பரிசோதகர் பணித்துள்ளார்.

மக்கள் அதிகளவில்போக்குவரத்துச் செய்யும் இப்பகுதிகளிலுள்ள உணவுச்சாலைகளிலும் தேநீர்க் கடைகளிலும் பெரிய ஈக்கள் மக்கள் உண்ணும் உணவுப் பொருள்களில் மொய்த்துக் கிடப்பது சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இப்பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிகளுக்கு முரண்பட்ட முறையில் இந்த உணவுச்சாலைகள் செயற்படுவதால் நெருப்புக் காய்ச்சல் முதலான தொற்று நோய்கள் மக்களுக்கு ஏற்பட ஏதுவாகின்றன என்றும் சுகாதார விதிகளைப் புறக்கணிக்கும் உணவுச் சாலைகள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (13.

# உபகரணங்கள் இன்மையால் விளையாட்டுத்துறை பாதிப்பு!

யாழ்ப்பாணத்தில் தற்போது கிரிக்கெட், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் பாடசாலை மட்டத்திலும், கழகங்கள் மட்டத்திலும் சிறிது சிறிதாக மீண்டும் ஆடப்பட்டு வருகின்றன.

ஆனால் இவ்விளையாட்டுக்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கான உபகரணங்கள் கொழும்பிலிருந்து இங்கு எடுத்து வரப்படாமையினால் இவைகளின் விலைகள் தற்சமயம் உயர்ந்து காணப்படுவதாகவும் இதனால் விளையாட்டுத் துறை இங்கு பாதிப்புறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (78)

□ □

# இன்று அரியாலையில்

ஒரு நாள் எறிபந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. (47)

# செய்தி உலகம்

## லெபனான் - பாலஸ்தீன ஒப்பந்தம்

பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் லெபனான் அரசுக்குமிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பெரும் ஆயுதங்களை அரசிடம் பாலஸ்தீனங்கள் ஒப்படைக்கவும், முக்கிய பகுதிகளில் லெபனான் இராணுவத்தினரை நிறுத்தவும் இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது.

## சுரங்க அகழ்வுக்குத் தடை

அந்தாட்டிக்காவில் சுரங்கப்பணி மேற்கொள்வதை 55 ஆண்டு காலத்திற்குத் தடைசெய்யும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமெரிக்கா முடிவு செய்துள்ளது. 1961 இல் எட்டப்பட்ட இத் தீவு பற்றிய ஒப்பந்தத்தில் அனைத்து உறுப்பு நாடுகளும் கைச்சாத்திட்டதும் அங்கு சுரங்க அகழ்வு வேலைகள் நிறுத்தப்படும்.

## அக்கினோ அமைச்சரவையில் பிளவு

பிலிப்பைன்ஸில் அக்கினோவின் அமைச்சரவையில் கடும் பிளவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அக்கினோவின் தலைமை உதவியாளரும் மற்றொரு உதவியாளரும் ராஜினாமாச் செய்துள்ளதை அடுத்தே இந்த நிலை அங்கு ஏற்பட்டுள்ளது

## இந்தோனேசியாவில் பூமிஅதிர்ச்சி

இந்தோனேசியாவில் இரண்டு தென்கிழக்குத் தீவுகளிட் கடும் பூமிஅதிர்ச்சி ஏற்பட்டதில் 21 பேர் கொல்லப்பட்டனர். 130க்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர். அரச கட்டிடங்கள் உட்பட 421 கட்டிடங்கள் இடிந்து விழுந்தன.


# தாதியர் பயிற்சி நெறி
# TRAINING FOR NURSING

**19- 07- 1991 இல் புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பமாகின்றன**

(சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தாதியருக்குரிய பாடத்திட்டப்பரீட்சைப் பெறுபேறுகள்)

1. சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஏற்றது

தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)

காலம்:- 1 வருடம் { பாடத்திட்டம் 6 மாதம் / செய்முறைப் பயிற்சி 6 மாதம்

**பயிற்சி நெறிக்கான முழுக்கட்டணம் ரூபா 1500/-**

(இலகு தவணை முறைகளில் செலுத்தலாம்)

(மாணவர் தொகையை மட்டுப்படுத்தியுள்ளதால் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்)

குறிப்பு:- மாவீரர் குடும்பத்தவருக்கு இலவசக்கல்வி

அதிபர்: வைத்திய கலாநிதி வி. பி. சுந்தரராஜன்
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 6, பருத்தித்துறை வீதி, (1 ஆம் ஒழுங்கை)
(மக் ரவல்ஸ் அருகில்)
யாழ்நகர். 07017

★ அரசிடம் தேசிய கிறிஸ்தவத் தலைவர்கள் கோரிக்கை

# மோதல்களை உடன் நிறுத்தி நிபந்தனையின்றிப் பேசவாருங்கள்!

மோதல்களை உடன் நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தையை நடத்த அரசு முன்வர வேண்டுமென கிறிஸ்தவ தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கை ஒன்றை இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சபையின் தலைவர்கள் விடுத்துள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படக் கூடாது எனவும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது

## தேடிவரும் திடீர் 'நட்பு' கவனம், மயங்கி விடாதீர்!

தமிழ் ரயில் பயணிகளை மயக்கி அவர்களிடம் நகை பணம் மற்றும் உடைமைகளை அபகரிக்கும் கூட்டமொன்று தற்பொழுது நடமாடி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவுக்கும் -கொழும்பு கோட்டைக்குமிடையே யாழ்தேவி ரயிலில் இக்கோஷ்டியின் கைவரிசை அதிகமாக உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

மயக்க மருந்து கலக்கப்பட்ட குளிர்பானம், டொபி போன்றவற்றை முன் அறிமுகமில்லாத பயணிகளுக்கு வழங்கி இக்கோஷ்டியினர் அவர்களுடன் திடீர் நட்பை ஏற்படுத்திக் கொள்கின்றனராம்.

பயணிகள் மயக்க நிலையை அடைந்ததும் அவர்களின் உடைமைகளைச் சூறையாடிக் கொண்டு இக்குழுவினர் தலைமறைவாகி விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வலிவடக்குப் பகுதியில் பாதிப்புற்றோர் விவரம் திரட்டப்படுகிறது

வலி.வடக்குப் புனர்வாழ்வுக் கழகம் அண்மையில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிப்புற்றோரின் விவரங்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதற்காக உருவாக்கப்பட்ட தகவல் சேகரிப்பு நிலையம் தற்போது தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகின்றது.

இத்தகவல் சேகரிப்பு நிலையம் வன்செயலால் பாதிப்புற்றோர் விவரம் திரட்ட தகவல்படிவம் ஒன்றை இப்பிரதேசப் பொதுமக்களுக்கு விநியோகித்து, இதன் மூலம் குடும்பத் தலைவரினால் கொடுக்கப்படும் விவரங்களை சேகரிக்கும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது (ப.10)

## 195 பேர் அனுமதி

மட்டு. பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலவென 1990-91 கல்வியாண்டுக்கு 195 புதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் பல்கலைக் கழகத்தில் 1990- 91 கல்வியாண்டுக்குப் புதிதாக 888 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளமை வாசகர் அறிந்ததே.

## ராஜீவ் கொலை தொடர்பாக 70 வயது முதியவரும் கைது!

ராஜீவ் கொலை தொடர்பாக 70 வயது முதியவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடபகுதியைச் சேர்ந்தவரும் புதுடில்லியில் தங்கியிருந்தவருமான கண்ணன் சபாபதி என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரைத்தவிர ஏ. ஆதரி என்ற 17 வயது யாழ் நங்கையும் டில்லியில் வைத்து இக்கொலை தொடர்பாகச்சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் சேர்த்து இதுவரை ராஜீவ் கொலை தொடர்பாக மொத்தம் 10 பேர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் இந்தியத் தமிழர்களாவர்.

## ஒரே ஒரு தமிழ் இலிகிதரே ஆயுர்வேத திணைக்களக் கடமையில்

இலங்கை ஆயுர் வேத திணைக்களத்தில் ஒரே ஒரு தமிழ் இலிகிதரே கடமையாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தமிழரும் 31. 05. 91 இல் இருந்தே நியமனம் பெற்றுள்ளார்.

1989 ஆம் ஆண்டிலிருந்து ஆயுர்வேத திணைக்களத்தில் தமிழ் அதிகாரி எவரும் சேவையில் இருக்கவில்லை.

## தமிழர் வீடுகளில் கொள்ளையிட சிங்கள இளைஞர்களுடன் கூட்டு

கொழும்பில் சில தமிழ்க் குழுக்கள் சிங்கள இளைஞர்களுடன் இணைந்து தமிழர்களின் வீடுகளைக் கொள்ளையிட்டு வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தகைய கொள்ளை முயற்சி ஒன்றில் ஈடுபட்ட தமிழ், சிங்கள இளைஞர்கள் அடங்கிய குழுவொன்று பொதுமக்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் இயங்கி வரும் தமிழ்க் குழுவொன்றைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெள்ளவத்தையில் ஹம்டன் லேனிலுள்ள தமிழர் ஒருவருடைய வீட்டைக் கொள்ளையிட முயன்ற போதே இக்குழுவினர் பொது மக்களினால் துரத்திப் பிடிக்கப்பட்டனர்.

## 1972, 73 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் ரத்து!

1972, 73 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டைகள் செல்லுபடியற்ற தாக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இக்காலத்தில் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டைகளை வைத்திருப்போர் அவற்றிற்குப் பதிலாகப் புதிய ஆளடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. இக்காலப்பகுதியில் சுமார் 5 லட்சம் அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

1972, 73 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருப்போர் அவற்றிற்குப் பதிலாக புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் அதற்கு போதிய பலன் கிடைக்காததினாலேயே முன்னர் வழங்கப்பட்ட அட்டைகள் செல்லுபடியற்ற தாக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

## கண்டியில் அதிபர்களின்றி 96 தமிழ்ப் பாடசாலைகள்

மத்திய மாகாணத்தில் 96 பாடசாலைகள் நிரந்தர அதிபர்களின்றி இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகள் பதில் தலைமையாசிரியர்களின் கீழ் நடக்கின்றன.

கண்டிக் கல்விக் காரியாலய தமிழ்ப்பிரிவு நடத்திய ஆய்வின்போது கண்டி, மாத்தளை, கம்பளை, தெநுவர ஆகிய பகுதிகளில் மேற்படி பாடசாலைகள் அதிபர்கள் இல்லாமல் இயங்குவதாகத் தெரியவந்துள்ளது.

## அனுமதி பெற்றுத் தங்கியிருப்போரும் பதிய வேண்டுமென அறிவிப்பு

இந்தியாவில் இலங்கை பாஸ் போட்டுடன் வெளிநாட்டுப் பிரஜைகளாக வாழ்பவர்களும் தம்மைப் பதிவு செய்தல் வேண்டுமென தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னைய அறிவிப்புடன் இத்திருத்தம் தற்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது.

## யாழ் மாவட்ட தடகள போட்டி

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான 1991 ஆம் ஆண்டிற்கான தடகளப் போட்டிகள் நேற்றும் இன்றும் யாழ் மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெறுகின்றன.

தற்காலச் சூழலில் போக்குவரத்து வசதியும் போதிய விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் இல்லாமலும் உள்ள நிலைமையிலும் இம்மாவட்டத்தில் விளையாட்டுப்போட்டிகள் நடாத்தியிருப்பது சிறப்பான விடயமே என்று தமது வாழ்த்துச் செய்தியில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். (16)

## தமிழகத்தில் இயங்கிய 5 அகதிமுகாம்கள் மூடப்பட்டன

தமிழ் நாட்டிலுள்ள ஐந்து இலங்கைத் தமிழர் அகதி முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பசும்பொன் தேவர் மாவட்டத்தில் இயங்கி வந்த ஏழு முகாம்களில் இரண்டும், தேவகோட்டையில் இயங்கி வந்த 6 முகாம்களில் மூன்றுமாக மொத்தம் ஐந்து முகாம்களே மூடப்பட்டவையாகும்.

இந்த முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் ஏனைய முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## வயிற்றோட்டத்துக்கும் தமிழர் மீதே பழி!

தெற்கில் வயிற்றோட்ட நோய் தற்பொழுது வேகமாகப் பரவி வருவது அறிந்ததே.

இந்த நோய் தெற்கில் வேகமாகப்பரவ யாழ் தமிழர் ஒருவரே காரணம் என சுகாதார அமைச்சின் செயலாளர் தற்பொழுது தெரிவித்துள்ளார்.

யாழ் பகுதியில் இருந்து வந்த ஒருவர் மூலமே இந்த நோய் தெற்கில் பரவியுள்ளது எனத்தெரிவித்திருக்கிறார் சுகாதார அமைச்சின் செயலாளர்.

## வங்கியாளர் பரீட்சையில் சொற்ப தொகையினரே சித்தி

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட வங்கியாளர் பரீட்சையில் மிகவும் சொற்பமானவர்களே சித்தியடைந்துள்ளதாக வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கு 78 பேர் பதிவு செய்து இருந்தனர். 40 பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இந்தப் பரீட்சையில் தேறியவர்கள் தற்காலிக எழுதுவினைஞர் தரத்திலிருந்து மேற்பார்வையாளர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (ப-11)

## பிரயாணிகளின் பயணத்திற்கு 9000 விமானங்கள் தேவை!

2005ஆம் ஆண்டளவில் உலகின் விமானப் பிரயாணிகளின் தேவையைச் சமாளிக்கக் குறைந்தது 9000 விமானங்களாவது தேவைப்படுமென போயிங் கமிட்டி உப தலைவர் தெரிவித்துள்ளார்.

அதாவது தற்போதுள்ள விமானத் தொகை இரண்டு மடங்காக வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் 250 கோடிப் பேர் தற்பொழுது விமானங்களில் பிரயாணஞ் செய்கின்றனர்.

## வடபகுதி வங்கிகளின் செயற்பாட்டுக்கு கட்டுப்பாடு

வங்கி சம்பந்தமான எந்த விளம்பரத்தையும் பத்திரிகைகளில் பிரசுரிக்கக்கூடாது என இலங்கை வங்கியின் கொழும்புத் தலைமையலுவலகம் வடபகுதி வங்கிகளுக்கு கட்டுப்பாடு விதித்துள்ளது.

மேலும் வடபகுதியில் செயற்படும் வங்கிகளுக்குரிய அதிகாரங்களும் தற்போது குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தென்பகுதி வங்கிகளின் வங்கிச்செயற்பாடுகள் அனைத்தும் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

## கோட்டப் போட்டிகள்

8ஆம் திகதி திங்கட்கிழமை மருதனாமடக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையேயான, கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் இக்கோட்டத்தைச் சேர்ந்த 11 கொத்தணிகளையும் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. (ப- 10)

# தொண்டர் ஆசிரியர்கள் நாளை ஊர்வலம்

தொண்டர் ஆசிரியர்களின் ஊர்வலமும் மகஜர் கையளிப்பும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பட்டப்படிப்புகள் கல்லூரியிலிருந்து காலை 9 மணிக்கு புறப்படும் இந்த ஊர்வலம் நிழல் நிர்வாக கல்விப் பொறுப்பாளர் அலுவலகம், செஞ்சிலுவைச்சங்கம், அரசாங்க செயலகம் கல்வித்திணைக்களம் ஆகியவற்றிற்கு சென்று மகஜர்கள் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ப-11

# க. பொ. த. மாணவருக்கு வங்கியில் கருத்தரங்கு

இலங்கை வங்கியின் மானிப்பாய், காங்கேசன்துறைக் கிளைகளைச் சார்ந்த அதிகாரிகள் அண்மையில் மானிப்பாய்க் கொத்தணியில் உள்ள க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வங்கியியல் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்றினை நடாத்தினார்கள்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வங்கியில் வைப்புகளை ஏற்படுத்துதல் பற்றியும் சிறு கைத் தொழில்களை ஊக்குவிக்க இலங்கை வங்கி மேற்கொண்டுள்ள கடன் திட்டங்கள் பற்றியும் விரிவான கருத்துரைகள் வழங்கப்பட்டன. (30)

# இன்று பண்டத்தரிப்பில் உயிர்த்த மனிதரின் கூத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியினரின் 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4. 30 மணியளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அரங்கில் மேடையேற இருக்கிறது.

முற்பகல் 10 மணிக்கும், பிற்பகல் 4 மணிக்கும் இரு காட்சிகளாக இடம்பெறவிருந்த இந்நாடகம் பிற்பகல் 4. 30 மணிக்கு ஒரே காட்சியாக இடம்பெறும் எனவும் காலைக்காட்சிக்கெனப் பெறப்பட்ட அன்பளிப்புச் சீட்டுக்கள் மாலைக் காட்சிக்கும் செல்லுபடியாகும் என விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் ஆதரவில் இடம்பெறும் இந்நாடகத்தினை நாடக அரங்கக் கல்லூரிக்கென க. சிதம்பரநாதன் நெறிப்படுத்தியுள்ளார்.

இந்நாடகத்திற்கான அனுமதிச் சீட்டுக்களை பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் பிரதேச அலுவலகங்களிலும்' இன்று மாலை மண்டபவாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ரூபா 10 மாத்திரம் அன்பளிப்பாகச் செலுத்திசீட்டுக்களைப் பெற்று நாடகத்தினைப் பார்வையிட்டுப் பயன்பெறுமாறு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### சுவிற்சலாந்து...

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கிகரிக்குமாறு கோரியும், ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகளைக் கண்டித்தும் இந்த ஊர்வலங்கள் நடைபெற்றன.

தலைவர் பிரபாகரனின் படங்களும் விடுதலைச் சுலோகங்களும் ஊர்வலங்களில் கொண்டுவரப்பட்டன. 37

### மலையக...

வரதன் மரணமான சூழ்நிலை குறித்து அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செய்தியாளரிடம் விபரித்தார்

மலையக மக்கள் முன்னணியின். நடவடிக்கைகள் பற்றியும் விசாரணைகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

A/L 92

தாவரவியல்

திரு. பொ. ஐங்கரநேசன்
புதிய பிரிவுகள்
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)

ஆரம்பம்:- 14 . 07 . 91 (ஞாயிறு)

காலை 6 - 7:- தாவர உடற்றொழிலியல்
காலை 7 - 8: தாவர இராச்சியத்தின் பிரிவினைகள்
(பதிய உடலமைப்பும் இனப்பெருக்கமும்)
பிற்பகல் 2 - 3:- தாவர உடலமைப்பியல்

யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

07028

# யாழ் பல்கலைக்கழகத்தின் 11 வது பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பதினோராவது பட்டமளிப்பு விழா நேற்று இரு அமர்வுகளில், வெகு கோலாகலமாக நடைபெற்றது.

கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவிற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா தலைமைதாங்கிப்பட்டங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கினார்.

664 பல்கலைக் கழக மாணவர்களுக்கு நேற்று கலாநிதிப் பட்டம், முதுமெய்யியல்மானி முதுகலைமானி, முதுவிஞ்ஞானமானி, பட்டப்பின்கல்வி டிப்ளோமா போன்றஉயர்பட்டங்களும் கலைமானி, நிர்வாகமானி, வர்த்தகமானி, மருத்துவமானி, சத்திர சிகிச்சைமானி, விஞ்ஞானமானி, சித்த மருத்துவமானிப்பட்டங்களும் இசைக்கலைமணி, நாட்டியக் கலைமணிவிருதுகளும் துணைவேந்தரால் வழங்கப்பட்டன.

நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பெருந்தொகையான மக்களும் பல்கலைக்கழக மாணவர்களின் உறவினர்களும்கலந்து கொண்டனர்.

இம்முறை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பெருந்தொகையான பெண் பட்டதாரி மாணவர்களே பட்டங்களுடன் வெளியேறியதைக் காணக் கூடியதாகவிருந்தது. (ப-11)

## ஆலோசனைக் கூட்டம்

வலிகாமம் பிரிவில் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலுதவிப்பயிற்சி பெற்று நிலையங்களில் கடமையாற்றுவோருக்கான மாதாந்த ஆலோசனைக் கூட்டம் யா/ நல்லூர் சாதனா பாடசாலையில் இன்று காலை 9 30 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர், போதனாசிரியர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். 48)

## சைவ மன்ற அலுவலகம்

இலங்கைச் சைவமன்றத்திற்கான அலுவலகம் ஒன்று பருத்தித்துறையில் திறந்து வைக்கப்படவுள்ளது இதற்கான நடவடிக்கைகளை இலங்கைச் சைவமன்ற பொதுச் செயலாளர் திரு.வே. புவனேந்திரம் மேற் கொண்டுள்ளார்

இலங்கைச் சைவமன்றம் பாலர்களின் நன்மைகருதி "ஸ்ரீகணபதி" சிறுவர் பாடசாலையையும் ஆரம்பிக்கவுள்ளது 15

## இன்று நேர்முகப் பரீட்சை

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தையல், தட்டச்சு ஆகிய ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் அனைவரையும் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் பணிமனைக்கு சமுகம் தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் ஜனாதிபதி சதாம் விரைவில் கவிழ்க்கப்படுவார்

ஈராக்கின் ஜனாதிபதி சதாம் ஹூசைன் இன்னும் நான்கு மாதங்களில் கவிழ்க்கப்படுவார் என ஈரானிய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தினால் அரசாங்கத்தை கொண்டு செல்ல ஈராக் அரசுக்கு வளமில்லாததே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் வெளிநாட்டமைச்சிலும் தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலிலும் சிரேஷ்ட அதிகாரியாக பணி புரியும் முஹமத் ஜவாத் என்பவரே இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

# படையினர் கைது செய்த 20 தமிழ் இளைஞர்களைக் காணவில்லை

கொழும்புப் பகுதியில் அண்மையில்கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் சுமார் 20 பேர் காணாமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களைத் தாங்கள் கைது செய்யவில்லையென படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் தமிழ் இளைஞர்கள் தங்கியிருக்கும் பகுதிகளில் தேடுதல் மேற்கொள்ளப்படுவதாகவும் தேடுதலில் குறிப்பாக யாழ்ப்பாண இளைஞர்களே கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (79)

# கூட்டுறவு ஊழியர்களுக்கு காப்புறுதித் திட்டம்

நாட்டில் உள்ள கூட்டுறவு ஊழியர்கள் காப்புறுதி செய்ய உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்திலும் பின்னர் ஏனைய இடங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படும் எனக் கூட்டுறவுத்துறை அமைச்சு வீரசிங்க மல்லிமாராச்சி கூறினார்.

இதற்காக நேற்று கொடி விற்பனையை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

# கொழும்பு நகரப்பகுதியில் கண்காணிப்புக் குழு

கொழும்பு நகரில் சில முக்கிய இடங்களில் பாதுகாப்பு கண்காணிப்புக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அப்பகுதியில் நடமாடும் வெளியிடத்தவர்கள் குறித்து அவதானிப்பார்கள் எனவும் சந்தேகம் ஏற்பட்டால் பொலிஸாருக்குத் தகவல் கொடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களே இக்குழுவில் அங்கம் வகிப்பார்கள்.

# குண்டு வெடிப்புச் சம்பவ விசாரணை தொடர்கிறது

கொழும்பு குண்டு வெடிப்புத் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பாதுகாப்புஅமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா தெவிரித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலருக்கு இச்சம்பவத்துடன் தொடர்பு இருக்குமா என ஆராய முன்னரே மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் வெளிவந்துவிடுகின்றன என பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. எஸ். செனிவிரட்ன கூறினார்.

# சைக்கிள் டயர் ரியூப் வவுனியாவில் பறிமுதல்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கூட்டுறவுச் சங்க லொறியில் கொண்டுவரப்பட்ட சைக்கிள் டயர், ரியூப் என்பனவற்றை வவுனியாவில் படையினர் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படை அனுமதியுடன் இவை கொண்டுவரப்பட்டதாகவும் அனுமதிப்பத்திரம் காண்பித்தும் யாழ்ப்பாணம் வர அனுமதி தரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (37)

# கொழும்பில் வாகனங்களை பொதுமக்கள் சோதனை

கொழும்பு மாநகரில் வாகனங்களைச் சோதனையிடுவது இனி பொதுமக்களும் மேற்கொள்வார்கள் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

பொலிஸாரின் முன்பாக பொதுமக்கள் குழு வாகனங்களைச் சோதனையிடுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### வவுனியாவில்...

களும் 1000 பன்டேஜ் ரோல்களுமே விநியோகிக்கப்படுகின்றன.

சில முக்கிய நோயாளிகளும் அத்தியாவசிய மருந்துகள் இன்றி பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தட்டெழுத்து பயிற்சி

தமிழ் தட்டெழுத்துப் பயிற்சியில் சேரவிரும்புவர்கள் இம் மாதம் 15 ஆம் திகதிக்கிடையில் கோப்பாய் நலன் காக்கும் பிரிவுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர், 33

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 07.07. 91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.